விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 12 நம்மூா 25 இதழ் 132

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-6-84

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA RECEIVED 29-6-1984 PERIODICALS DIVISION

யாழ். பல்கலைக்கழகம்,

## மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

### பகிஷ்கரிப்பு நீடிக்கிறது!

(ஏ. வி. மாணிக்கம்)

பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற சம்பவங்களுக்கும், மாணவர் உயிரிழப்புக்கும், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகலபீட மாணவர்களும் கண்டனம் தெரிவித்து நேற்றுக் காலை ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி அனுதாபக்கூட்டம் வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக வளவிற்குள் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது சுலோகங்களைக் கோஷித்த மாணவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கிச்சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய மாணவர்கள், பின்னர் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் கூடி, இறந்த மாணவர்களுக்காக

(8ம் பக்கம் பார்க்க)

# "வடபகுதி தீவிரவாத இளைஞர்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பதைத் தவிருங்கள்"

## சர்வமதத் தலைவர்கள் அரசுக்கு கோரிக்கை

### இனமத ஒற்றுமை வாரம் அனுஷ்டிக்கவும் முடிவு

(இ. கந்தசாமி)

**வடக்கிலுள்ள தீவிரவாத இளைஞர்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பதை தவிர்க்கும் பட்சத்திலேயே அவர்களை வெற்றிகாண முடியும் என்று சர்வமதத் தலைவர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.**

கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வமதத்தலைவர்கள் கருத்தரங்கிலேயே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கு பற்றி பத்திரிகையாளர்களுக்கு வண. திஸ்ஸ பாலசூரிய. வண. வெலன்தில விமலரத்தின தேரோ ஆகியோர் விளக்கமளித்தனர். கருத்தரங்கு பற்றி மேலும் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:

அடுத்தமாதம் 22ம் திகதி முதல் 29ம் திகதி வரை நாடு முழுவதும் இனமத ஒற்றுமை வாரம் அனுஷ்டிப்பதென்று இக்கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பிரசார நடவடிக்கைகளை அடுத்த மாதம் 15ம் திகதி ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டதுடன் அதற்கான இரண்டு குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன,

நாட்டில் அமைதி ஏற்பட ராணுவரீதியில் அல்ல அரசியல்ரீதியிலேயே தீர்வுகாண்பது அவசியம் என்று மதத் தலைவர்கள் பலர் வலியுறுத்தினர்.

மொத்தம் 78 மதத் தலைவர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். இவர்களில் 21 பௌத்தமதகுருமார் 17 இந்துமதத்தலைவர்கள், 29 கத்தோலிக்க மதத் தலைவர்கள், 13 முஸ்லிம் தலைவர்கள்.

## லொறிச் சாரதிக்கு றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் சைக்கிள் லொறி விபத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த தங்கவேலு கைலாசநாதன் என்பவர் பலியானதைத் தொடர்ந்து லொறிச்சாரதி றிமாண்டில் வைக்கப்பட்டார்,

யாழ் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம், நேற்று மரண விசாரணை நடத்தினார்.

கொக்குவிலிலிருந்து மோட்டார் சைக்கிளில் காங்கேசன்துறை செல்லும் வழியில் இவ்விபத்து நடந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

சந்தேகநபரான லொறிச் சாரதி க. யோகேஸ்வரனை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்தி வைத்தார். [க]

## காயமடைந்தவர் மரணமானார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், சத்திர சந்திக்கருகில் குண்டு வீச்சில் காயமடைந்த நல்லூரைச் சேர்ந்த ப. பரமேஸ்வரஐயர் நேற்றுமுன்தினம் மரணமானார்

காயமடைந்த இவர் யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

(8-ம் பக்கம் பார்க்க)

## "நட்டத்தில் இயங்கிவரும் அரசநிறுவனங்களை மூடவும்"

### இலங்கைக்கு உதவும்நாடுகள் யோசனை

[கொழும்பு]

நட்டத்தில் இயங்கும் கூட்டுதாபனங்களை மூடிவிடுமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பல ஆலோசனை வழங்கியுள்ளன.

பாரிசில் நகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலை வன்செயல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த வாரம் நஷ்டஈடு!

(திருகோணமலை)

**திருகோணமலை நகரில் கடந்த வருடம் ஜூலை மாதம் இருபத்து ஆறும் திகதி இரவு சேதப்படுத்தப்பட்ட அல்லது தீக்கிரையான வீடுகள், கடைகள், தியேட்டர்களுக்கு அடுத்த வாரம் நஷ்டஈடு வழங்கப்படும்.**

ஜூலை 26-ம் திகதி இரவு நிகழ்ந்த சம்பவங்களில் நூற்றுக்கும் அதிகமான கட்டடங்கள் தரைமட்டமாகின.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் சங்கத்தலைவர் ஜனாப் ஏ. ஸி. அலி அக்பர் 'றேபியா' தலைவருக்கு விடுத்தகோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து 'றேபியா' தலைவர் இது குறித்து அரசுக்கு சிபார்சு செய்திருந்தார்.

அமைச்சரவை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட போதிலும் நஷ்டஈடு இதுவரை வழங்கப்படவில்லை.

நஷ்டஈடு மூன்று கட்டங்களாக வழங்கப்படும் என்றும் முதல் கட்டமாக நஷ்டஈட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பகுதி அடுத்தவாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மா. அபி. சபைகள் கலைப்பு!

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆறு மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் நேற்று கலைக்கப்பட்டன.

உள்ளூராட்சி அமைச்சர் என்றவகையில் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா விஷேட விசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இச் சபைகளின் சகல அதிகாரங்களும் மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

## திருநெல்வேலி சம்பவம்: ஒருவர் பலி! நான்கு பொலிஸார் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கும், இளைஞர்களுக்குமிடையே நடந்த துப்பாக்கிசமரில், வ.போ. சபை டிப்போ இன்ஸ்பெக்டர் பலியானார். உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர், உட்பட நான்கு பொலிஸார்காயமடைந்தனர். பஸ் சாரதி படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

யாழ். பஸ்நிலையத்திலிருந்து கோண்டாவில் பஸ்டிப்போவிற்கு, ஒருபஸ்ஸில் பணம் கொண்டுசெல்லப்பட்டதாகவும், இதற்குப் பாதுகாப்பாக 'ஜீப்'பில் ஆயுதந்தாங்கிய பொலிஸார் சென்றதாகவும் கூறப்படுகிறது.

திருநெல்வேலியில் வீதியின் நடுவில் லொறிஒன்று குறுக்கே விடப்பட்டிருந்தபோது, பஸ்ஸும் 'ஜீப்'பும் நிறுத்தப்பட்டதும், சுற்றுப்புறத்திலிருந்து வெடிகள் தீர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது [illegible] சேர்ந்த

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியில் சதுரமான காணித்துண்டும், 1 சிறீ Morris Minor காரும் உடனே விற்கப்படும். 73/1 பலாலி ரோட், கந்தர்மடம். 482

மிருசுவில் ஸ்ரேசனுக்கு முன்பாக பலவித பிரயோசனங்களுடனுன 75 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,. 494

சுன்னுகம் சந்தியிலிருந்து அரை மைல் தூரத்தில் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்திருக்கும் நான்கு அறைகளும் மற்றும் சகல வசதிகளுடனுமான வீடு ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சி. சிவஞானம், முனிஸ்வரா கபே, சுன்னுகம், 499

காரைநகர் துறைமுகம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் நெடுஞ்சாலையில் கிணற்றுடன் கூடிய இரு காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொன்னம்பலம், பிள்ளையார் கோயிலடி, துறைமுகம். 442

## SALE

2 h. p. and 1 h. p. motors with starter for immediate sale. Radakrishna's 392, Navalar Road, Kailasapillayar Kovilady 501

## காணவில்லை

23-ம் திகதி சனிக்கிழமை பொமினேரியன்பெண்நாய்பிறவுண் கலர் 4 குட்டிகள் பிறந்து ஆறுநாள். குட்டிகளின் பரிதாபநிலை தாய் இல்லாமல் துடிக்கிறது. தயவுசெய்து உடனேகண்டவர்கள்கொண்டு வந்து தரவும். சன்மானம் ரூபா250/- தரப்படும். A.இராசநாயகம், (க ரா ஜ்), 58, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 493

## WANTED

Part time Tutor cum Instructor in Electronics. Apply Registrar, Patrician Institutes, 58, St.Patricks Road, Jaffna. 500

## விண்ணப்ப அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மலேசியா யோகூர் பட்டு பாகற்ஜலன் மெர்பா இல: 7 என்னும் இடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற வீரவாகு நாகலிங்கம் பெண் பரணம் என்பவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் பேரில்மூவாரில் இருக்கும் மலேசியா மேல் நீதிமன்றத்தால் 6-10-1975ம் திகதி வழங்கப்பட்ட நிர்வாகத் தத்துவப் பத்திரத்தை இலச்சனையிடுவதற்கான விண்ணப்பத்தின் பேரில்,

மலேசியா யோகூர் பட்டு பர்கற்ஜலன் மெர்பா இல: 7இல் வசிக்கும் வீரவாகு நாகலிங்கம் என்பவர் தனது அற்ரேனி தத்துவகாரன் ஏழாலை குப்பிளான் காசிப்பிள்ளை நல்லையா மூலம்

மனுதார்

வழ, இல: ரி/195

இவ்விண்ணப்பம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குப்பின் மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் நிர்வாகத் தத்துவப் பத்திரத்தின் பேரின் மூவாரில் இருக்கும் மலேசியா மேல் நீதிமன்ருல் 6-10-1976ம் திகதி கொண்ட நிர்வாகத் தத்துவப் பத்திரத்தை 1977ம் ஆண்டு 20ம் இலக்க குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவை 554 (யு) பிரிவின் கீழ் இந் நீதிமன்ருல் இலச்சனையிடுவதற்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**க. வைரவநாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி.

21-3-1984, 497

## WANTED

Wanted Secretary for Jaffna Y. W. C. A — with good knowledge of English and typing. Salary negotiable. Apply before 15th July to President, Y.W.C.A. Weaver lodge, Vembadi Road, Jaffna. 406

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு: தொடர்புகள் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரை. S. நடராசா, 19, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். 495

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் ருத்திரபசுபதி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்து விடயத்தில் — மரணமடைந்தவர்

வழக்கு இல: தத்துவம்/3534

ருத்திரபசுபதி கைம்பெண் கேதாரகௌரி, 143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். — மனுதார்

எதிராக

ருத்திரபசுபதி மகள் விஜயலட்சுமி, 143/4, பிரப்பங்குளம், ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். — எதிர்வாதி

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 1-ந்திகதி முற்பகல்9-00 மணியளவில் இந் நீதிமன்றத்தில்தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1981-ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**தா. குலஞானம்,**
பதிவாளர்

வரைந்தவர்:
**கா. ஜெகநாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி

24-5-84

காரணம் காட்டும் திகதி 6-7-84க்குநீடிக்கப்பட்டுள்ளது.

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்

496

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றததில்

மரணசாதனமில்லாது மரணமெய்திய கைதடிச் சந்தி கைதடி, இளையதம்பி குமாரசுவாமியின் மரணசாதனமில்லாத மரணச் சொத்து விடயமாக:-

மரணமெய்தியவர்

குமாரசுவாமி கைம்பெண் இராசம்மா கைதடிச் சந்தி, கைதடி.

மனுதார்

வழக்கு இலக்கம் 219

எதிராக

1. குமாரசுவாமி மகள் பிரசாந்தி
2. குமாரசுவாமி மகள் கிருசாந்தி
3. குமாரசுவாமி மகன் பிரணவன் யாவரும் கைதடி மத்தி, கைதடி
4. தங்களது வழக்குப் பாதுகாவலர் நாகலிங்கம் தேவபாலசுந்தரம் மூலம் கைதடி தெற்கு, கைதடி

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிம்ன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 11-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
**ஆ. குணநாயகம்**
பதிவாளர்

தயாரித்தவர்
(ஒப்பம்)
**ந. கணேசயோகன்**
மனுதாரின் சட்டத்தரணி

இது ஓர் உண்மைப் பிரதி

491

அல்வை வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்

## புதிய நிர்வாகசபை தேர்வு

மேற்படி தேவஸ்தான நிர்வாகசபையில் அங்கத்துவம் வகிக்க விரும்புவோர், அதற்குரிய விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பித்து, எதிர்வரும் ஆடிமாதம் 4-ந் திகதியலன்ருே, அதற்கு முன்பதாகவோ சமர்ப்பிக்கும்படி வேண்டுகிருேம். குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப்பத்திரம் ரூபா 2/50 செலுத்தி தேவஸ்தானப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். அங்கத்துவ இடாப்பு ரூபா 1/-

**வே. கணேசன்,**
செயலாளர்.

492

## சுயவேலை வாய்ப்பு - பயிற்சி

DIPLOMA IN DRAUGHTS MANSHIP
(வார — வார இறுதிப் பயிற்சி)

★ பயிற்சி — 6 மாதம்
★ O/L, A/L மாணவ மாணவிகட்கு ஏற்றது.
★ Drawing Board "T" Square

பயிற்சிக்கு வழங்கப்படும்

**ஆரம்பம்: 27 – 06 – 1984 காலை 10 மணி**

விபரங்கட்கு:
INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
11B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(15 வருடஅனுபவம் வாய்ந்த தொழில் நுட்பநிறுவனம்)

502

## சவுதியில் உடனடி வேலைவாய்ப்பு

சவுதி யான்பு துறைமுகத்தில் பணிபுரிவதற்கு மேலும் 150 தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

**சம்பள விகிதம்:** (8 மணித்தியாலங்களுக்கு)

**SR 600**

**வயது:** 21 வயதுக்கு மேல்.

**வேலை ஒப்பந்தம்:** 3 வருடங்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் எங்கள் வடமாகாணப் பிரதிநிதி

திரு. C. V. இராஜேந்திரம் அவர்களை "அமராவதி", கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்ற முகவரியில் நேரில் சந்திக்கவும்.

நேர்முகப்பரீட்சை கொழும்பு B. M. I. C. H. மண்டபத்தில் 27-06-84, 28-06-84 ஆகிய தினங்களில் நடைபெறும்.

### SAFEWAY

United & Management Services (PVT) Ltd
P. O. BOX 2047, COLOMBO.

Labour Licence No. 439.
Labour Approval No. FE/6/FEA/809/4504

498

**கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,**

## கொழும்பு ஸ்ருடியோ

## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

**நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?**

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

### Cross Travel Services (Pte) Ltd.

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA,
Phone No: 22040, 22065,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிய இரசாயன நச்சு வாயுக்களை ஈராக்கிற்கு அமெரிக்கா வழங்கியது!

## ஈரான் குற்றச்சாட்டு

**தெஹறான் ஜூன், 25**

**ஈரான் மீது பாவிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட இரசாயன நச்சுப் பதார்த்தங்களை ஈராக்கிற்கு அமெரிக்கா வழங்கியதாக ஈரான் குற்றஞ் சாட்டியது.**

ஈரானின் உத்தியோக பூர்வ செய்தித் தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் கடந்த பெப்ரவரி மாதம் ஈரானியப் படைகள் மீது ஈராக் ஐ. நா. விதிகளுக்கமைய தடைசெய்யப்பட்ட கொடிய இரசாயன நச்சு வாயுக்களை பயன்படுத்தியுள்ளது என்றும் இதனல் ஈரானிய வீரர்கள் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் கொடிய வியாதிகளுக்கு ஆளாகியும் உள்ளார்கள் என்றும் இந்தக் கொடிய நச்சு வாயுக்களை அமெரிக்கா தான் ஈராகிற்கு வழங்கியிருப்பது தெரிய வந்துள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஸ்பெயினில் இருந்து கிடைக்கும் புதிய சான்றுகளின் படி இந்த உண்மை நிருபணமாகியுள்ளது.

''அமெக்கரிாவின் இந்தச் செயல் அந்த நாட்டின் சுயரூபத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. என்றும் ஈரானிய செய்தித்தாபனம் தெரிவித்துள்ளது.

ஈரானின் இந்தப் பாரிய குற்றச் சாட்டுத் தொடர்பாக அமெரிக்கா எதுவித கருத்தும் உடனடியாக வெளியிடவில்லை. (சூ)

## அணு ஆயுத பேச்சுக்கள்: றீகன் மீது ஜனநாயகக் கட்சி கண்டனம்!

### எட்வேர்ட் கெனடி மொண்டேலே ஆதரிப்பார்

வாஷிங்டன் ஜூன் 25

அணு ஆயுத குறைப்பு சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்க ஜனுதிபதி சோவியத் தலைவரை இதுவரை சந்திக்காதது குறித்து அமெரிக்க ஜனநாயகக்கட்சி தலைமைப்பீடம் கண்டனம் தெரிவித்துள்ளது. வாஷிங்டனில் கூடிய கட்சியின் அங்கத்தவர் எதிர்வரும் ஜனுதிபதித் தேர்தலில் தமது கட்சியின் கொள்கை விளக்கங்கள் பற்றி விவாதித்தார்கள்.

கியூபாவுடன் நிலையான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதும், நிக்கரகுவா மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதும் தமது கட்சியின் கொள்கையாகும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை செனட்டர் எட்வேர்ட் கெனடி ஜனநாயக கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் வால்டர் மொண்டேலே ஆதரிக்க முன்வந்துள்ளார். (சூ)

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 ஹெட்ஸ் அன்ட் ரெயில்ஸ் சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 தகவல் நிகழ்ச்சி (சிங்களம்)
6 25 'கால்நடைச் செல்வம்' விவரணச் சித்திரம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 எதிர்கால நிகழ்ச்சிகள்
7-45 மேற்கத்திய இசை 'என்டர் டெய் னேர்ஸ் ஒன்டுவர்'
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கனடா சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒரு விவரணச் சித்திரம்
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 இசை நிகழ்ச்சித் தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

# "இலங்கைத் தமிழர்பிரச்னை: சுமுகமான தீர்வுவேண்டும்"

## தி.மு.க.செயற்குழு கோரிக்கை

(சென்னை)

''இலங்கை தமிழர் பிரச்சனை தொடர்பாக சுமுகமான தீர்வினை மத்திய அரசுகாணவேண்டும்'' என்று தி.மு.க செயற்குழுதீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

புதுக்கோட்டையில் நடைபெற்ற தி.மு.க செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டமுடிவில் தி.மு.க தலைவர் திரு மு.கருணுநிதி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா வரும் இந்திய வம்சாவளி மக்களுக்கு சிறந்த புனர்வாழ்வுத் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் அமுல் செய்ய வேண்டும் மென்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (சூ)

## உணவு உதவி வழங்குமாறு நிக்கரகுவா கோரிக்கை

மனகுவா, ஜூன், 25

நிக்கரகுவாவில் ஏற்பட்டுள்ள கடும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக அந்தநாடு ரோப்பிய பொருளாதார சமுகத்திடம் அவசர உணவு உதவி வழங்குமாறு கோரியுள்ளது.

தற்போதைய மதிப்பீடுகளின்படி நிக்கரகுவாவில் இன்னும் இரண்டு மாதங்களில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்படவுடுள்ளதினல் 2 கோடி டாலர் பெறுமதியான உணவுத் தானியங்களை அவசரமாக அனுப்பிவைக்குமாறு நிக்கரகுவா கோரியுள்ளது.

நிக்கரகுவாவில் வலதுசாரி கெரில்லாக்களின் போராட்டத்தினல் பல ஏக்கர் நிலப் பரப்பில் உணவு தானியம் நாசமாக்கப்பட்டதினலேயே அங்கு இத்தகையதொரு உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (சூ)

## சோவியத்-எகிப்து விரைவில் முழு ராஜதந்திரதொடர்பு!

கெய்ரோ ஜூன் 25

சோவியத் யூனியனும் எகிப்தும் முழு அளவில் ராஜதந்திர தொடர்புகளை விரைவில் ஏற்படுத்திக் கொள்ளவிருக்கின்றன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும்எகிப்து மேற்கொண்டு வருகிறது.

சோவியத்யூனியனுக்கு செல்லவிருக்கும் எகிப்திய தூதுவரின் பெயர் தற்போது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளும் தற்போது பெரிய அளவில் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வருகின்றன.

சோவியத்யூனியனுடன் எகிப்து ஏற்படுத்தவிருக்கும் ராஜதந்திர தொடர்பினல் அணிசேரா நாடு என்ற வகையில் எகிப்தின் அந்தஸ்து சர்வதேச அரங்கில் உயரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரபு - இஸ்ரேலிய யுத்தத்தின் போது நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்த இந்த நாடுகளும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உறவுகளை முறித்துக் கொண்டிருந்தன. (சூ)

## 'பட்டதாரி மாணவருக்கு கட்டுப்பாடு வேண்டும்'

### — லலித்

(கொழும்பு)

''பேச்சுச்சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகியவற்றை மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. பட்டதாரி மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும்''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான திரு' லலித் அத்துலத்முதலி நேற்று யக்கலவில்நடைபெற்ற மகாபொல புலமைப்பரிசில் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது இரண்டு பட்டதாரி மாணவர்கள் பலியாகியுள்ளனர். இவர்களிலொருவர் தங்காலையைச் சேர்ந்தவர். மற்றவர் மொறகொல்லயைச் சேர்ந்தவர்.

''சிறந்த தலைவர்களை உருவாக்குவதற்காகவே பலர் பல்கலைக் கழக மாணவர்களின் புலமைப் பரிசில் நிதிக்கு உதவி வருகிறுர்கள்.

''பல்கலைக் கழக மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்தால்தான் பொதுமக்களினது நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெறமுடியும். இரு பட்டதாரிமாணவர்கள் இறக்க நேரிட்டது குறித்து நான் வருத்தமடைகிறேன்.

''இந்த இரு மாணவர்களின் நடத்தையிலும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நடந்து கொண்ட விதத்திலும் தவறு இருக்கிறது.

''வாகனங்களுக்குத் தீவைக்கவும், உடைமைகளுக்குத் தீவைக்கவும் பல்கலைக் கழக

(6ம் பக்கம் பார்க்க)

குரேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய முயற்சி:-
குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No : 22040, 22065. Telex No : 22207 (C. T. S.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம்மைத் தெரிந்துகொள்ளாமல், வெளி உலகத்தைத்தெரிந்துகொள்ளமுடியாது நம்மைத்தெரிந்துகொண்டபிறகோ வெளிஉலகத்தில் தெரிந்துகொள்ள ஒன்றும் கிடையாது.

—ரமண மகரிஷி

## நமதுநோக்கு

# இந்திய-இலங்கை முயற்சிக்கு அமெரிக்க ஆதரவு

முதலில் முட்டையாயிருந்து பிறகு பறவையாவது பறப்பனவற்றின் இயல்பு;பறவையே முட்டையிடுகிறதென்பது எவருக்கும் தெரியும்,

முட்டைக்கு ஆதியில் மயிரிருந்ததென்றும், மனிதன் முட்டையில் மயிர்பிடுங்கியதால் இன்றைய தோற்றம் உண்டானதென்றும் ஒரு ஹாஸ்யக்கருத்துண்டு,

எனவே அமெரிக்க ஜனுதிபதி றீகனும் இலங்கை ஜனுதிபதி ஜெயவர்த்தனுவும் பேசிய இரண்டு விடயங்களில் எதுமுந்தியது (முக்கியமானது) என்று வாதித்தல் மயிரில்லா முட்டையில் அதனைப்பிடுங்க எத்தனிப்பது போலாகும்.

சர்வதேச பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்கும் திட்டம் அமெரிக்க ஜனுதிபதி போன்ற ஆள் அணி உள்ளவர்களுக்கு முடியும்.

ஜனுதிபதி ஜயவர்த்தனுவிற்கு அந்த அவசிய அலுவலில் அதிகஅக்கறை உண்டு. தாயார் புற்றுநோய்க்குப் பலியானதன் காரணமாக, ஒரே ஒருமகன் புற்றுநோய் நிபுணராகப் படித்துப் பட்டம்பெற்று, பிரமச்சாரியம் பூண்டு தன்வாழ்நாள் முழுதையும் அக்கொடிய நோய் வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் அர்ப்பணித்தாரென்று ஒருவரலாறு உண்டு.

இந்த நோக்கில் இன்று இலங்கையைக் கலக்கிச் சேருக்கும் வடபகுதி 'பயங்கரவாதம்' ஜனுதிபதி ஜயவர்த்தனுவை உலக ரீதியில் இந்த நோய் பெருத்துவிடாது தடுக்கும் பணியில் தூண்டியிருக்கிறது.

உலக ரீதியில் அது அவ்வாறு செயற்படும் வேளையில், இலங்கை அந்த இயக்கத்தைக் காத்திருப்பது விவேகமா?

பயங்கரவாதத்தில் பத்து விதங்கள் உண்டென்பதால் 'பத்திரிகை'கள் அதனைப் பத்துவிதமாகத் திரிப்பது நியாயமானது போல் தெரிகிறது.

எங்கள் நாட்டின் வடபகுதி 'பயங்கரவாதம்' பிரமாதமாகப் பேசப்படுகிறது. தெற்கில், கிழக்கில், மேற்கில் நடைபெறுவது என்ன வாதம்? தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கு என்ன முறை? ஆடிக்கலவரம் மகா பயங்கரவாதமென்று வர்ணித்தல் தவரு?

அரசுக்கு எதிராக நடத்தப்படும் தீவிரவன்செயல் (ஆடிக்கலவரம் உட்பட) பயங்கரவாதமென்று கொண்டால் இலங்கையில் முக்கியத்துவம் பெற்றிருப்பது வடபகுதி 'பயங்கரவாதம்' என்று அரசுகொள்வதை நாம் அதிகம் ஆட்சேபிக்கவில்லை.

இதனை அடக்கி வெற்றிகொள்ள முடியாத நிலையில், இந்திய அரசு இந்த இயக்கத்துக்கு புகலிடம், பயிற்சி அளிக்கிறதென்ற குற்றச்சாட்டு பலத்த குரலில் எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தியா உட்பட பல நாடுகளில் இவ்வித பயங்கரவாதம் உண்டு, நோய் ஒன்ருனுலும் ஒவ்வொரு நோயாளியும் தனிப்பட்ட நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனரென்பது மருத்துவம், ஒரே மருந்து கொடுக்கப்படுவதில்லை.

இலங்கையில் நடைபெற்ற அப்பாவித் தமிழ் மக்களின் கொலைகள் சாதாரண உள்நாட்டுச் சம்பவம் என்று இலங்கை அரசாங்கம் பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறது,

நாகரிக மனித சமுதாயமோ தெய்வ சாந்நித்தியமோ அவ்வாறு கருதாது.

எனவே ''பயங்கரவாதிகளைத் திருப்பி அனுப்புங்கள்'' என்று இந்திராவுக்கு விடுக்கப்படும் பரவலான கோரிக்கை பலனளிக்குமென்றுநினைக்க இடமில்லை.

ஜனுதிபதி றீகன் தலைமையில் தயாராகும் பதில் இயக்கம் உருவாகிச் செயற்படும் வரைக்கும் இந்தப் பிரச்னை நீண்டு கொண்டு போவது நாட்டுக்கு நன்மையாகாது.

அமெரிக்க ஜனுதிபதிதேர்தலை எதிர்நோக்கும் வேளையில் இலங்கையில் சமாதானம் காண்பதையும், இந்த அரசியல் குழப்பம் அரசியல் ரீதியில் தீர்க்கப்படுவதையும் நன்ருக விரும்புசிருர்.

இந்தியா இதற்கு உதவுமானுல் இன்னும்அதிகரித்த மகிழ்ச்சி அவருக்கு அளிக்கும்; இந்திராவும் பஞ்சாபில் நடந்தேறிய சம்பவங்களால் கவலை கொண்டிருக்கும் வேளையில் இலங்கை விடயத்தில் அரசுக்கு எவ்வித அவலமும் ஏற்படாத முறையில் ஆலோசனைகூறச் சித்தமாயிருப்பார். வடபகுதி 'பயங்கரவாதிகளை' 'சுதந்திரப் போராளிகள்' என்று கருதும் இந்தியப் பிரதமரின் கருத்துக்கு அவர்கள் கட்டுப்படுவது சாத்தியம்.

எனவே அமெரிக்க விஜயத்தை வெற்றிகரமாக முடித்துவரும் இலங்கை ஜனுதிபதிக்கு பிரிட்டனில் நல்ல ஆலோசனைகள் வழங்கப்படும்; அவை எதுவும் தமிழர் பிரச்னையிட்டு போர் தொடுக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டிராது.

புதுடில்லியில் ஒரு பூரண முடிவுகாண வழி கிடைக்கா விட்டாலும் படிப்படியாக சமாதானம் ஏற்படக்கூடிய தொடக்கநடவடிக்கைகயை எதிர்பார்க்கலாம்.

### அகதிகளுக்கு உடைகள்

(கரவெட்டி)

கடந்த ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 25 பேர்களுக்கு அச்சுவேலி லயன்ஸ் கழகம் யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் உடைகள் வழங்கியது.

# மீண்டும் வேகமாக இயங்கவிருக்கும் யாழ். இலக்கிய வட்டம்

## பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய பல செயல்த் திட்டங்கள்

**யாழ்.** இலக்கிய வட்டத்தை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. 1964 ம் ஆண்டில் ஈழத்து தமிழ்எழுத்தாளர்களது இலக்கியப் படைப்புகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற் காகவும், சொந்தநாட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்து கைதூக்கிவிடுவதற்காகவும், அதே சமயம் இலக்கிய வெளியீடுகள், விழாக்கள், சொற்பொழிவுகள், சிறப்புரைகள், கலந்துரையாடல்கள் மூலமாக தமிழ் பேசும் மக்களிடத்து இலக்கியப் பசியை ஏற்படுத்துவதற்காகவும் யாழ் இலக்கிய வட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதற்தலைவராக இரசிகமணி கனக செந்திநாதனும், செயலாளராக நா. சண்முகநாதனும் (யாழ்வாணன்), பொருளாளராக கவிஞர் இ. அம்பிகைபாகனும் (அம்பி) தெரிவு செய்யப்பட்டனர். 1966ம் ஆண்டு ''இலக்கியம்'' என்ற யாழ். இலக்கிய வட்ட மலரையும் வெளியிட்டு, தொடர்ந்து பற்பல நற்பணிகளைச் செய்து பெரிதும் பிரதிபலிக்கமான அமைப்பாகத் திகழ்ந்தது.

சமீப காலமாக இவ்வட்டத்தின் செயற்பாடுகள் ஒரு தக்க நிலையை அடைந்தது இலக்கியவாதிகள் த்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது சொல்லத்தேவையில்லை.

**எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன்**

ஆறு வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் சென்ற சனிக்கிழமை யாழ். இலக்கிய வட்டம் புதிய பல திட்டங்களுடன் செயல்படத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அன்றைய தினம் யாழ். திறந்த வெளியரங்குச் சதுக்கத்தில் கலைப்பேரரசு ஏ, ரி. பொன்னுத்துரை தலைமையில் பொதுச்சபை கூடியது, குறமகளின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமான கூட்டத்தில் தலைவர் தமது உரையில் ''கவிஞர் கந்தவனம் தலைமையின் பின் மந்தகெதியுடனும், இடைக்கிடை உத்வேகமாகவும் இயங்கிய யாழ். இலக்கிய வட்டம் குழந்தைகள் ஆண்டுக் கொண்டாட்டங்களை பன்னலை சேர் கனகசபை வித்தியாலயத்திலும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்திலும் சிறப்பாகக் கொண்டாடியது. திரு. ஞானசேகரன் எழுதிய வீரகேசரி வெளியீடான 'குருதிமலை' நாவல் வெளியீட்டையும் வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடினேம். 'சாவித்திரி சரித்திரம்' நூல் வெளியீடும் நடாத்தினேம்'' எனக் கூறினுர். இணைச் செயலாளர் நா. சண்முகநாதன் சென்ற கூட்ட அறிக்கை வாசித்த பின்னர் புதிய உறுப்பினர்கள் அங்கீகாரம் இடம் பெற்றது, பின்னர் புதிய உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக சு, சபாரத்தினமும் (சசிபாரதி), உபதலைவர்களாக திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), ஆ. இராஜகோபால் (செம்பின் செல்வன்] ஆகியோரும், இணைச் செயலாளர்களாக கல்வயல் வே. குமாரசாமியும், நா. சண்முகநாதனும் [யாழ். வாணன்], பொருளாளராக க. குணராசாவும் [செங்கை ஆழியான்] தெரிவுசெம்யப்பட்டனர். பதினெருபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது,

### அறுவடை குற்றச்சாட்டு

உத்தியோகத்தர் தெரிவின் பின்னர் பேசிய செங்கை ஆழியான் [illegible] நா[illegible]

லாவது குறுநாவல் போட்டியில் இராஜ மகேந்திரன் என்பவர் பரிசு பெற்ருர். அவரது நாவல் ஒரு இலக்கியத் திருட்டு என 'அறுவடை' விமர்சித்தது, இக் குற்றச் சாட்டை எழுத்தாளரோ அல்லது நடுவர்களோ ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. இச்சபை ஒரு பரிசீலனைக் குழுவைத் தெரிவு செய்து இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அத்துடன் கனக செந்திநாதன் நினைவாக தொடர்ந்தும் இவ் வட்டம் குறுநாவல் போட்டியை நடாத்த முன்வரவேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார். இக்கட்டத்தில் எழுந்த யாழ் வாணன், ''உடனுக்குடன் பதில் கொடுத்திருந்தால் இப்பிரச்சினை வளர்ந்திருக்க இடமில்லை. 'அறுவடை'யை வைத்துக் கொண்டு தினகரனை மதிப்பிடமுடியாது. மதிப்பிடவும் கூடாது'' என பின்னர் சபை ஏகமனதாக பரிசீலனைக் குழுவிற்கு குறமகள். சிற்பி, எஸ். பத்மநாதன் ஆகிய மூவரையும் தெரிவு செய்து, இவர்களது எழுத்துமூல அறிக்கையை நா. சுப்பிரமணியம் பகுத்தாய்வு செய்து வெளியிட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது,

பின்னர் மயிலங்கூடல் நடராஜன் பேசும் போது ''யாழ் இலக்கிய வட்ட வரலாற்றை தினகரனில் வெளியிடுவது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்'' எனக் கூறினுர்.

சி சரவணபவன் (சிற்பி) பேசும்போது பரிசீலனைக்குழு நிச்சயமாக நடுநிலையான அறிக்கையை வெளியிடும் என உறுதி கூறினுர். புலவர் வே. கனகசபாபதி தமது அபிப்பிராயத்தை வெளியிடுகையில், அவ்வப்போது வெளிவரும் இலக்கிய ஆக்கங்களை விமர்சிப்பதற்கு ஒரு விமர்சனக்குழு நியமித்தல் விரும்பத்தக்கது என்ருர். அடுத்துப் பேசிய நா. சுப்பிரமணியம் ''இருபது ஆண்டுக்கால வரலாற்றை எழுதும்போது புதிய பரிணுமத்தை நாம் அடைய வேண்டும். ஒருவர் இறந்த பின் கௌரவித்தலைவிட உயிருடன் இருக்கும் போதே அவரைக் கௌரவித்தல் சிறப்புடையதாகும். இதற்கு சமகால விமர்சனம் ஏற்படுத்தப் படவேண்டும்'' என ஆலோசனை கூறினுர். பண்டிதர் க. சச்சிதானந்தன், புதிய ஆக்கங்கள் உறுப்பினர்களால் மாதாமாதம் வாசிக்கப்பட வேண்டும் என்ற தமது கருத்தை எடுத்துரைத்தார்.

### ஆண்டுச் சந்தா

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆண்டுச் சந்தா ரூபா 10/- இல் இருந்து, ரூபா 25/- ஆக உயர்த்துவதெனவும் சபை ஏகமனதாகத் தீர்மானித்தது.


### பரிசுத் திட்டம்

பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவருகின்ற சிறுகதைகளை மூன்று மாதத்திற் கொருமுறை விமர்சித்து முதலாவதாகத் தெரிவு செய்யப்படும் சிறுகதைக்கு ரூபா 150/-ம், இரண்டாவது சிறுகதைக்கு ரூபா 100/-ம் பரிசாக வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான அறிவித்தல்களை பத்திரிகைகளுக்கு கொடுப்பதெனவும், எழுத்தாளர்கள் தத்தமது (யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில்) வெளியான சிறுகதைகளை அனுப்பிவைத்தால் மட்டுமே அவை போட்டிக்கு ஏற்றுந்கொள்ளப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும்

(5ம் பக்கம் பார்க்க)

# சிப்பிக்குள் முத்தான மார்க்கண்டு சுவாமிகள் வாழ்க்கை

[சிவயோக சுவாமிகளின் சீடராகிய மார்க்கண்டு சுவாமிகள் மகாசமாதியடைந்து ஒரு மாதமாகின்றது. சுவாமிகள் வாழ்ந்த கைதடி ஆசிரமத்தில் இன்று (சிறிதாக அமைக்கப் பெற்ற) கோட்டத்தில் திருவடி இணைகள் பிரதிஷ்டை செய்யம்பெற்று, அபிடேக ஆராதனைகளும் மகேசுர பூசையும் நிகழவிருப்பதையொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது]



கையில் ஒருகுடை, இடுப்பில் வெள்ளை வெளேரென்ற துண்டு; கிட்ட நெருங்கியதும் கோதிமுடித்த வெண்மயிரும், காற்றிற் பறக்கும் மென்தாடியும் பார்ப்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைய, உலகின் சுழற்சியோ, நாகரிகத்தின் சூருவளியோ, எட்டியும் பார்க்காத கிராமத்தின் சூழலில் வாழ்ந்தவர் மார்க்கண்டு சுவாமிகள்.

சிவயோக சுவாமிகள் மகாசமாதியடைத்தபின் அவர் விளக்கிய சித்தர்மரபைக் குருசீடர் நெறிவழியே தொடர்ந்தாரெனினும், மார்க்கண்டு சுவாமிகள், தமக்கென ஒரு தனித்துவமான மௌன தவ வாழ்வையே வகுத்துக் கொண்டு, குருநாதன் அருளியபடி, கைதடியில், கிடுகினுல் வேயப்பட்ட ஒரு சிறு குடிலை ஆசிரமமாக அமைத்துக்கொண்டு சும்மா இருந்து வந்தார்.

இவர் 29-1-1899 இல் தைப் பூரநட்சத்திரத்தில் பண்டத்தரிப்பிலுள்ள பிரான்பற்று என்னும் கிராமத்தில் சரவணமுத்து சின்னக்குட்டி தம்பதிகள் செய்த தவப்பயனுள்த் தோன்றினுர்.

இவர் தமது உயர் கல்வியைச் சுன்னுகம் கந்தரோடை இந்துக் கல்லூரியில் பயின்று அரச சேவையில் எழுதுவினைஞரானுர்.

இவருக்கு இளமையிலேயே யோகசுவாமிகளின் தரிசனமும் உபதேசமும் கிடைத்தன. அக்காலந்தொட்டு இருவருக்குமிடையே குரு-சீட உறவு உண்டாகக், குருநாதன் அடிச்சுவட்டிலே இளைஞரும் நைட்டிகப் பிரமசரியவிரதம் மேற்கொண்டார்.

யோகசுவாமிகள் இவர்பால் வைத்திருந்த கருணையையறிந்த அன்பர்கள் இவர்தாம் அவருடைய பிரதமசீடனெனக்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் பீலிக்ஸுக்கு ரூ. 4 லட்சம் வழங்க உத்தரவு

## 'டெய்லிநியூஸ்' மீதான அவதூறு வழக்கில் தீர்ப்பு

[கொழும்பு]

திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவுக்கு நான்கு லட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 'லேக்ஹவுஸ்' நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இந் நிறுவனத்தைத் சேர்ந்த ஆங்கிலத் தினசரியான 'டெயிலிநியூஸ்' 1976ம் ஆண்டு நவம்பரில் எழுதிய ஆசிரியத் தலையங்கமொன்றில் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவை அவமதிக்கும் தகவல்களை வெளியிட்டிருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

அந்த ஆசிரிய தலையங்கம் தற்போதைய நிதிஅமைச்சர் திரு. ரொனிடிமெல் தெரிவித்த கருத்தொன்றை அடிப்படையாகவைத்தே எழுதப்பட்டிருந்தது. திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவும் அவரது பாரியாரும் பிரிட்டனில் இலங்கை ஸ்தானிகராலயத்திடமிருந்து 1973ம்-77ம் ஆண்

(7ம் பக்கம் பார்க்க)

# மாணவர் கல்வியில் 'பெற்றோரின் பெரும்பங்கு

(யாழ்ப்பாணம்)

''மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஆசிரியர்களிடம் மட்டுமல்ல, பெற்றோர்களிடமும் தங்கி இருக்கிறது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை செல்கின்றார்களா? கல்வி பயில்கிறார்களா? என்று கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் எதிர் காலத்தில் மாணவர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாகத் திகழமுடியும்''

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தமக்களிக்கப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அதிபர் திரு. ஏ. ஐ.எல். குணநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி மகா வித்தியாலய ஆசிரியர் நலன்புரிக் கழகத் தலைவர் திரு. கே. மனுவல் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. குணநாயகம் இவ்வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி யாழ். புனித சார்ல்ஸ் வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம்பெற்றுச் செய்வதையொட்டி இவ் விழா நடாத்தப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவல் அடிகளார் பேசுகையில் திரு. குணநாயகம், மாணவர்களை எப்பொழுதாவது தண்டித்ததாகத் தாம் கேள்விப்படவில்லை என்றும், அன்பாலே அரவணைத்து அவர்களைக் குணக்குன்றுகளாக வழிநடத்தினார் என்றும் பாராட்டினார்.

மற்றும் வித்தியாலய அதிபர் திரு. அகஸ்தீன், ஆசிரியர் திரு. எஸ். பழனிச்சாமி உட்பட பல ஆசிரியர்கள்பாராட்டுரை வழங்கினர். (மா)

# சட்டைக்குள் தங்கத்தை மறைத்து கடத்த முயன்ற பெண்!

[மன்னார்]

சுமார் இரண்டு பவுண் எடையுள்ள தங்கக் கட்டியை மேல் சட்டைக்குள் மறைத்து வைத்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல எத்தனித்த பெண்மணி ஒருவர் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டார்.

தலைமன்னார் துறைமுகத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது கொழும்பைச் சேர்ந்த பெண்மணி ஒருவரே சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டவராகும்.

தலைமன்னார்- ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லவென தலைமன்னார் துறைமுகத்திற்கு வந்த இப் பெண்மணியை சோதனையிடுமாறு உத்தரவிட்டார்

இவ் உத்தரவையடுத்து இப் பெண்மணி சோதனைக்குட்படுத்தப்பட்ட போது மார்பகச் சட்டைக்குள் சுமார் இரண்டுபவுண் எடையுள்ள தங்கக்கட்டி ஒன்றும், இலங்கை நாணயம் 1097 ரூபாவும், இந்திய நாணயம் 340 ரூபாவும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

இக் கடத்தல் முயற்சி பற்றி விசாரணை மேற்கொண்ட தலைமன்னார் துறை சுங்க கலெக்டர் திரு பாலேந்திரா, உதவி சுங்க கலெக்ட்டர் திரு சி. பொன்னையா, சுங்க அதிகாரி திரு ஏ. டி. டி. பெரேரா ஆகியோர் தங்கக்கட்டியையும், இலங்கை, இந்திய நாணயங்களையும் பறிமுதல்செய்து அப் பெண்மணியை இந்தியாவுக்குப் பயணம்செய்ய அனுமதித்தனர்.

## மீண்டும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

''இலக்கியவட்டச்செய்திகள்'' என்ற பத்திரிகையைச் செம்பியன் செல்வனை ஆசிரியராகக் கொண்டு வெளியிடுவதெனவும் அதனை உறுப்பினர்களுக்கும், நூலகம், வாசிகசாலை போன்றவற்றிற்கும் அனுப்புவதெனவும் வட்டத்தின் மாதாந்தக்கூட்டம் ஒவ்வொருமாதமும் கடைசிச் சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு திறந்த வெளிச்சதுக்கத்தில் கூடுவதெனவும், அஞ்சல் முகவரியாக ''செயலாளர், யாழ். இலக்கியவட்டம் மாநகரசபை யாழ்ப்பாணம்'' எனப்பாவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்தகூட்டத்தின் போது குறமகள், வரதர், சிற்பி, கே. வி. நடராஜன் ஆகிய நால்வரும் தத்தமது சிறுகதைகளைவாசிப்பர். அவை அன்று விமர்சனம் செய்யப்படும்,

வரதர், கோபு, காரை. சுந்தரம்பிள்ளை, ரி. எஸ். லோகநாதன், பொ. சண்முகநாதன் வருகைதந்திருந்த முக்கியஸ்தர்களில் சிலராவர். அன்றைய மாலைப்பொழுது மிக்க பிரயோசனமாய் கழிந்தது. பல இலக்கியகர்த்தாக்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும் சந்திக்கக்கூடியஒருவாய்ப்பு அன்று ஏற்பட்டது. மொத்தத்தில் நல்ல திகதியில் புனரமைக்கப்பட்ட யாழ். இலக்கிய வட்டம் அரும்பெருஞ் சாதனைகளைச் சாதிக்கவேண்டுமெனவும், விறுவிறுப்போடும், சுறுசுறுப்போடும் இயங்கி இலக்கியப்பணியில் இருபதாவது வருடத்தை எட்டிப்பிடிக்க இருக்கும் இவ்வமைப்பு, இந்த ஆறுவருடகால இடைவெளியை நிரப்புவதற்கு வேகமாகச் செயற்படும் என இலக்கிய உலகம் எதிர்பார்க்கிறது. யாழ். இலக்கியவட்டத்தின் நிறைவான பணிகள் தொடரட்டும்.

# அண்ணாமலை பல்கலைக்கழக புதிய வேந்தர்

(சென்னை)

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் வேந்தராக திரு. எம்.ஏ.எம் ராமசுவாமி தமிழ் நாடு ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பல்கலைக்கழக ஸ்தாபகராகவும், வேந்தராகவும் ராஜ சேர் அண்ணாமலைச்செட்டியார் இருந்தார். அவர் அண்மையில் காலமானதையடுத்தே புதிய ஸ்தாபகராகவும், வேந்தராகவும் திரு. ராமசுவாமி நியமனம் பெற்றுள்ளார்.

பல தொழில் நிறுவனங்களின் இயக்குனராக இவர் இருந்துவருகின்றார். விளையாட்டுத்துறைக்கும் சிறத்தபங்களிப்பைவழங்குகின்றார். இந்திய ஹாக்கிசம்மேளனத்தின் தலைவராக இவர் இருந்தபோதே இந்தியா கோலாலம் பூரில் ஹாக்கி உலகக் கிண்ணத்தையும், மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கத்தையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. (கி)

# சிப்பிக்குள் முத்தான

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கருதி இவரை மார்க்கண்டு சுவாமிகள் என அழைப்பாராயினர்.

இளைப்பாறியபின் 'சுவாமிகள் யாழ்நகரில் ஒரு நண்பருடன் வசித்துவந்தார். அப்பொழுது கைதடியிலுள்ள ஓர் அன்பரின் காணியில் வெறுமையாக ஒரு குடிசை இருப்பதையறிந்த குருநாதர் அவரிடம் 'உமக்கு ஒரு கூட்டாளியைத் தரப் போகிறேன். அந்தக் குடிசையைச் சுத்தம்செய்யும் என்று என்று கட்டளையிட்டார். அதன் பிரகாரம் 1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி மார்க்கண்டு சுவாமியைக் குருநாதர்அழைத்துச் சென்று ''இனி நீ இங்கே இரு'' என்று கூறி அமர்த்தினார். அன்றைய தினத்தை அவ்வன்பரும் அவர் வழிவந்தோரும் பெருநாளாகக் கொண்டு ஆண்டுதோறும் கொண்டாடி வந்தனர். அன்று தொடங்கிய தவவாழ்கை சென்ற 29-5-84 வரையும் நடைபெற்றது.

ஆறுதல் வார்த்தைகேட்டு அமைதிபெற சுவாமிகளிடம் சென்றால் அவர்கள் குறிப்பறிந்து அவர்களை இருக்கையிலிருத்தி கற்பூர ஒளியில் திருமுறைப் பாசுரங்கள், நற்சிந்தனைப் பாடல்கள் சிலவற்றைப் பாடுவார்கள். சென்றவர்கள் அவற்றிலே விடையும் அமைதியும் பெற்று நிறைமனதோடு மீள்வர். அடியார்கள் கொண்டு செல்லும் கையுறைகளில் மிகமிகச் சிறிய பகுதியை மாத்திரம் தாம் ஏற்றுக்கொண்டு மீதிப்பெரும் பகுதியை அவர்களிடம்வழங்கி விடுவார்.

சந்தசாமி என்று யோக சுவாமிகளால் அழைக்கப்பெற்ற சோல்பரி பிரபுவின் புதல்வர் ராம்ஸ்போதம் பிரபு மார்க்கண்டு சுவாமிகளுடன் இக் குடிசையில் மிக எளிமையாக வாழ்ந்து, சாதனைகளிலீடுபட்டு, சந்தேகங்கள் தெளியப்பெற்றுப் பெருமகிழ்வடைந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் செய்த சமய சமூகத்தொண்டுகள் பல. தமது ஊரிலுள்ள சிறு பிள்ளைகளை ஒன்று சேர்ந்துத் தேவார திருவாசகங்களை பஜனை பண்ணச் செய்து பரிசில்கள் வழங்குவார், பெரிய வளவு முருகமூர்த்தி ஆலயத்துக்குப் பல திருப்பணி வேலைகள் செய்வித்துள்ளார். பாடசாலை அபிவிருத்தியோடு ஒரு வாசிகசாலையையும் நிறுவியுள்ளார். அது சரஸ்வதி சமூக நிலையம் என்று அரசால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏழைச் சிறுவர் சிறுமிகட்குச் சைவத் தமிழ் நூல்களை வழங்கியுள்ளார்.

சிப்பிக்குள் மூடுண்ட ஒளி வீசும் நன்முத்துப் போல், இந்தக் குழப்பம் மிகுந்த உலகில் மௌனமாக இருந்து அமைதியைக் கண்டும் காட்டியும் வாழ்ந்த மகான் மார்க்கண்டு சுவாமிகள் 29-5-84 வைகாசிக் கார்த்திகைத் தினத்தில் மகா சமாதியடைந்தார்கள்.

ஓர் அன்பர்

# கருச்சிதைவினால் இளம் பெண் மரணம்

[கரவெட்டி]

திருமணமான இளம் பெண் சட்டவிரோத கருச்சிதைவினால் மரணமானார். இச்சம்பவம் கரவெட்டிப் பகுதியில் நடைபெற்றது. இப்பெண் அண்மையில் திருமணமானவர். கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் புரிகிறார்.

இப்பெண்ணுக்கு கருச்சிதைவு ஏற்பட்டு கடுமையாக மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா மரணவிசாரணை நடத்தினார்.

மரணவிசாரணையில் இப் பெண் ஐந்துவருடமாகக் காதலித்த ஒருவரை அண்மையில் திருமணம் செய்ததாகவும் கணவன் வெளிநாடு ஒன்றில் தொழில்புரிவதாகவும் தெரிவிக்கப்பட்டது,

கருச்சிதைவினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

யாழ். நகர மக்களுக்கோர்

நற்செய்தி!

காமற் ரான்ஸ்போட் லிமிட்டெட்

நிறுவனத்தின் புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம்— > கொழும்பு

கொழும்பு— > யாழ்ப்பாணம்

27-06-84 புதன்கிழமை மாலை 7 மணிக்கு எமது சேவை ஆரம்பமாகின்றது:

சொகுசான குளிரூட்டப்பட்ட உறங்கல் இருக்கை வசதி கொண்ட நவீன பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்.

★ கிறீன் பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்
26, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம். போன்: 23875

★ நியு வி. எஸ். எஸ். கே.
348, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24020

★ மினி ரேட் சென்ரர்
ஜே. எம். சி. கட்டிடம், 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24331

★ கிருஸ்ணாஸ் கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை

சேவை: காங்கேசன்துறையிலிருந்து மாலை 6-00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் மார்க்பெட் (Markfed) முன் (லிடோ சினிமா அருகில்) தரித்துச் செல்லும். 505

உ

சிவமயம்

திருமண அழைப்பு

மணமகன்: ஸ்ரீதரன்
(பொறியியலாளர் அவுஸ்திரேலியா)

மணமகள்: யசோதரா

இடம்: சவணாய், புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

நேரம்: காலை 9-00 மணி—11-00 மணிவரை

திகதி: 27—6—84

திரு., திருமதி
வைத்தியநாதர் முத்துலிங்கம்
(பிரதி சுங்க அதிகாரி)
சுங்க இலாகா,
சவணாய்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

திரு., திருமதி
கந்தையா சிவஞானம்
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
கமலாசினி வீதி,
சரசாலை,
சாவகச்சேரி.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. 508

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்—ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 12 [26-06-1984]
வாரம்: செவ்வாய்.
திதி. துவாதசி பகல் 10-26ன் மேல் திரயோதசி.

மேடம்: நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகலாம். பிணிஅகலும் உங்கள் உதவிக்குப்புத்திரர் விரைவர் சிறப்புமுண்டு.

இடபம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம் தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும் பொன்னான தினம்.

மிதுனம்: மனக்கவலைகளுக்கு இடமளிக்கும் கடமையில் தடையேற்படும் மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள் பேச்சில் கவனம் வேண்டும்.

கடகம்: மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு மனம்போல் யாவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சிங்கம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் இனசனக் கொண்டாட்டமும் புத்திர சுகமும் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

கன்னி: அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்திதோன்றும் வீணான சிந்தனைகளினால் சோர்வுதென்படும்.

துலாம்: இல்லறத்தில் இனிமைதவழும் வெளியிடத்து தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்.

விருச்சிகம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம் பொருட்செலவுமுண்டு.

தனுசு: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

மகரம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப் படலாம் இதன் மூலம் பதவியின் உயர்வும் கிடைக்கலாம் பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

கும்பம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும் புதுத்தொழில் முறைகளை மனம் நாடும் நீண்டபிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

மீனம்: பகைவர்கள் பதுங்குவர் பாதையில் தடைகள் உண்டு நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம் முன்செச்சரிக்கை நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

# ரூபவாகினியில் இவ்வார தமிழ் நிகழ்ச்சிகள்

[கொழும்பு]

26-ந் திகதி செவ்வாய்க்கிழமை: 6-25 கால் நடைச் செல்வம் [விவரணச் சித்திரம்]

27-ந் திகதி புதன்கிழமை: 5-40 'இது உங்கள் நாடு' [அனுராதபுரம் பற்றிய சித்திரம்] 6-30 உள்ளூர்த் தமிழ்த் திரைப்படத் தொடர் 'வாடைக்காற்று'-அங்கம் 1.

ஏ. ஈ. மனோகரன், கே.எஸ். பாலச்சத்திரன், டாக்டர் இந்திரகுமார், பிரான்சிஸ்ஜெனம், சிவா. சிவபாலன், ஆனந்தராணி நடித்தது.

29-ந் திகதி: வெள்ளிக்கிழமை: 6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழில்] அளிப்பவர் கே. எஸ். பாலச்சந்திரன்.

## பட்டதாரி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு அனுமதியளிக்கமுடியாது, வன்முறைகள், சுவரொட்டிகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாது.

''பல்கலைக் கழகப் பரீட்சைகள் அடுத்த மாதம் நடத்தப்படும். பல்கலைக் கழக மாணவர்கள் குழப்பம் விளைவித்தால் பல்கலைக் கழகங்கள் மீண்டும் திறக்கப்படமாட்டாது'' என்றார், (வெ)

## யாழ். நவீன சந்தை கடைகள் வாடகை

# வர்த்தக நிலைய உரிமையாளர் சங்க ஆலோசனை பெறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கடைகளின் வாடகைஇனி மேல் அதிகரிக்கப்படும் போது, நவீன மார்க்கட் வர்த்தக நிலைய உரிமையாளர் சங்கத்தின் ஆலோசனை பெறப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம், நவீன மார்க்கட் வர்த்தக நிலைய உரிமையாளர் சங்க தூதுக்குழுவிடம் மேற்கண்ட உறுதியை அளித்தார்.

வர்த்தக சங்க குழுவில் தலைவர் திரு ரி. சங்கரப்பிள்ளை, உபதலைவர் திரு நித்தியானந்தன், செயலாளர் ஜனாப் எம். ஜி. பஸீர், ஜனாப் எம், ஏ, கரீம் ஆகியோர் சென்றிருந்தனர்.

வர்த்தக நிலையங்களின் குத்தகை காலத்தை ஏழு வருடத்திலிருந்து ஐந்து வருடமாக குறைத்ததுபற்றி குழுவினர் ஆட்சேபம் தெரிவித்தனர்,

இலங்கை முழுவதும், குத்தகை காலம் குறைக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்த விளக்கத்தை தூதுக்குழுவினர் ஏற்றுக் கொண்டனர்.

வாடகையை 50 வீதம் அதிகரித்ததை ஆட்சேபித்த தூதுக் குழுவினர், 25 வீதமாககுறைக்கும்படியும் இதுபற்றி மீள் பரிசீலனை செய்யுமாறும் கோரினார்கள்.

உடனே ஆணையாளர் சம்பந்தப்பட்ட 'பைல்களை' வரவழைத்து அதனைப் பார்வையிட்டபின் பல பேர் வாடகையைக் கட்டிவிட்டதாகவும், இனிமேல் மீள் பரிசீலனை செய்ய முடியாதென்றும் விளக்கமளித்தார்.

ஒருவர்கூட வாடகையைக் கட்டிவிட்டால், அதுபற்றி மீள் பரிசீலனை செய்ய முடியாதென்றும் தெரிவித்தார்.

இதனை குழுவினர் ஏற்றுக் கொண்டு, இனிமேல் வாடகை அதிகரிக்கும்போது தங்களுக்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். (க)

## வாசகர்களுக்கு வசதி

(ஊரெழு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பொதுசன நூல் நிலையத்தில் புதிதாக மலசலகூடமொன்று அமைக்கப்பட்டுள்ளது நூல்நிலையத்திற்கு வருகைதரும் வாசகர்களின் நலன்கருதி சுன்னாகம் உபஅலுவலகம் இந்த வசதியைச் செய்துகொடுத்துள்ளது.






## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப்பாடல்கள் எஸ்.அருள்மணிநாதன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்கள்
7-00 வயலின்- லால்குடி ஜீ.ஜெயராமன், ஸ்ரீமதி
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்திய மஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
6-35 கோபுரதரிசனம்- கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன்கோவில்

இரவு
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-00 உலகச்செய்திகள்
8-10 களத்துமேடு
8-25 முகத்தார் வீட்டில்
8-40 நாட்டுப்பாடல்
8-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9:10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்- பக்திப்பாடல்
9-30 [illegible] ஜீ. ஜெயராமன்

# சுவீப்முடிவுகள்

[கொழும்பு]

969-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**
**01 H 0434**
**ரூ. 2 லட்சம்**

**இரண்டாவது பரிசு**
**07 A 0017**
**ரூ. 75,000**

**மூன்றாவது பரிசு**
**03 Y 0488**
**ரூ. 25,000**

1,052 ரூபா 10 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு,

| | |
|---|---|
| 13 A 0211 | 13 A 0451 |
| 19 A 0293 | 20 A 0631 |
| 22 A 0182 | 02 B 0518 |
| 05 B 0819 | 08 B 9040 |
| 10 B 0831 | 12 B 0798 |
| 22 B 0586 | 03 C 0200 |
| 06 C 0628 | 16 C 0052 |
| 03 D 0366 | 05 D 0873 |
| 13 D 0219 | 17 D 0732 |
| 01 E 0884 | 12 E 0518 |
| 16 E 0857 | 01 F 0308 |
| 08 F 0079 | 08 G 0298 |
| 09 G 0172 | 12 G 0548 |
| 14 G 0974 | 15 G 0367 |
| 19 G 0954 | 21 G 0020 |
| 11 H 0572 | 13 H 0460 |

| | |
|---|---|
| 13 H 0694 | 20 H 0403 |
| 07 J 0381 | 10 J 0278 |
| 11 J 0126 | 14 J 0185 |
| 17 J 0262 | [1 J 0753 |
| 17 J 0778 | 01 K 0538 |
| 03 K 0473 | 09 K 0312 |
| 10 K 0375 | 13 K 0562 |
| 13 K 0588 | 01 L 0553 |
| 10 L 0084 | 15 L 0698 |
| 05 M 0595 | 12 M 0703 |
| 20 M 0682 | 21 M 0119 |
| 02 N 0172 | 03 N 0156 |
| 04 N 0914 | 05 N 0203 |
| 08 N 0670 | 13 N 0859 |
| 17 N 0194 | 02 O 0316 |
| 03 O 0633 | 07 O 0326 |
| 12 O 0890 | 19 O 0757 |
| 17 P 0809 | 18 P 0673 |
| 02 Q 0616 | 12 Q 0166 |
| 15 Q 0579 | 22 Q 0002 |
| 01 R 0878 | 03 R 0848 |
| 04 R 0693 | 05 R 0326 |
| 22 R 0004 | 07 S 0279 |
| 14 S 0945 | 04 T 0865 |
| 08 T 0084 | 02 U 0143 |
| 01 U 0968 | 03 U 0233 |
| 15 V 0657 | 02 X 0600 |
| 02 X 0627 | 06 X 0646 |
| 09 X 0007 | 17 X 0066 |
| 22 X 0424 | 07 Y 0389 |
| 10 Y 0233 | 10 Y 0984 |
| 13 Y 0817 | 03 Z 0632 |
| 11 Z 0552 | 14 Z 0021 |
| 14 Z 0721 | 18 Z 0438 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## யாழ். குடாநாட்டில்

# 5,488 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது

[கொழும்பு]

யாழ். குடாநாட்டில் காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு 5,488 ஏக்கர் காணிகளை சுவீகரித்துள்ளது.

இத்தகவலை பிரதம மந்திரியும் உள்ளூராட்சி வீடமைப்புத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்சொன்னவாறு சுவீகரிக்கப்பட்ட 107 காணிகளில் 256 ஏக்கர் கொண்ட 16 காணிகள் அவற்றில்ஒன்பதுசொந்தக் காரர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன. என்றும் பிரதமர் தமது எழுத்துமூலமான பதிலில் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
Sondra Currie in
POLICE WOMEN
(Color-Karate Film)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
2-வது கடைசி மாதம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**அன்பேஆருயிரே**
(கலர்-புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்
தினசரி 2-30, 5-30
**மீண்டும்
கோகிலா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30
பாக்கியராஜ் - சரிதா
**மௌன கீதங்கள்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
வீரப்பா — சுமலலதா
**திசைமாறிய
பறவைகள்**

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ரஞ்சன்—அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**
(புதிய பிரதி)

**ரீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt....
**NIGHT
CROSSING**
Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45
7-00
Top entertainment of
the Day..
New way of Action
Karate you have
ever seen before
**SHOGUN'S
NINJA**
(Color)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சரிதா
**துணை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30,2-30,6-30
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பல ஆண்டுகளுக்குப் பின்னர் திரையிடப்படுகிறது.
சிவாஜி-சரோஜாதேவி
எம். ஆர். ராதா
நடித்த
**வளர் பிறை**
[புதிய பிரதி]

## 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

# யாழ். இந்துக் கல்லூரி சம்பியனானது!

## வீரர் பகீரதன் 8 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கட்டுகள்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகள் 15 வயதுக்குட்பட்டோர் அணிகளுக்கிடையில் நடாத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதிஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இன்னிங்ஸால் வெற்றிபெற்றுச் சாம்பியன் சுற்றுக்கேடயத்தைப்பெற்றுக்கொண்டது. இப்போட்டி கடந்த வெள்ளி, சனி ஆகிய இருதினங்களும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.


ஸ்கோர் விபரம்:- முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் துரிதமாக இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. யாழ். இந்து பந்துவீச்சர்ளர்களான ரி. பகீரதன், சிறப்பாகப் பந்துவீசி 8 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பி. பிரபானந்தன் 11 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகள், கே. புவனேந்திரன் 4 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்கள்.

யாழ். இந்துக்கல்லூரி 9விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. கே.ஜனகன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 53 ஓட்டங்களை ஆட்டமிழக்காதுபெற்றார். பி. சிறீகணேசன் 46 ஓட்டங்கள், பி. பிரபானந்தன் 26 ஓட்டங்கள், எஸ். ஞானமோகன் 21 ஓட்டங்கள், எஸ். துஷ்யந்தன் 12 ஓட்டங்கள், எஸ். ரவிக்குமார் 10 ஓட்டங்கள். யூனியன் கல்லூரி பந்துவீச்சாளர்களான ரி.கேதீசன் சிறப்பாகப் பந்துவீசி 67 ஓட்டங்களைக் கொடுத்து 6விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். ஆர். கோடீஸ்வரன் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைக்கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் யூனியன் கல்லூரி சகலவிக்கெட்டுகளையும் துரிதமாக இழந்து 84 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ரி. கேதீசன் 23 ஓட்டங்ள், சி. குலேந்திரன் 28 ஓட்டங்கள். யாழ், இந்து பந்துவீச்சாளரான ரி.பகீரதன் 15ஓட்டங்களுக்கு 4 விக்வகட்டுகள், பி. பிரபானந்தன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகள், எஸ். ஞானமோகன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்கள்.

இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி யூனியன் கல்லூரியை இனிங்சாலும் 57ஓட்டங்களதலும் வெற்றியீட்டி இந்த வருடத்தின் சாம்பியன் சுற்றுக்கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. யாழ். இந்துக்கல்லூரி அணி இவ்வருடம் கலந்து கொண்ட சகல போட்டிகளிலும் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. [வி]

## வண்ணை தியாகன்



துள்ளிசைக் கவிமன்னன் வண்ணைத் தியாகன் மறைந்து இம்மாதம் ஓராண்டு பூர்த்தியாகிறது.

அவரால் இயற்றப்பட்ட பல துள்ளிசைப் பாடல்கள் இப்பொழுதும் வானொலி நேயர்களின் காதுகளைத் துளைத்துச் சென்று இதயங்களை மகிழ்வித்துக்கொண்டிருக்கின்றன.

கவிஞரது பல பாடல்கள் வானொலி நிலையத்தால் வழங்கப்படுகின்ற சன்மானத் தொகையின் 'பவுச்சர்' மாற்றப்படுவதற்காகவோ அன்றி வேறெந்தக் காரணங்களாலுமோ வேறு ஒரு சிலரது பெயருடன் சங்கமமாகிவிட்ட சங்கதி பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அதுபோலவே கவிஞர் 'வண்ணைத்தியாகன்' எண்கணித சாஸ்திரத்திலும், வாக்கிய பஞ்சாங்க சாஸ்திரத்திலும் ஈடுபாடுடையவர் என்ற சங்கதியும் பலர் அறியாத ஒன்றே.

கவிஞருடைய மூத்த புதல்வி கீதாஞ்சலி வடமாகாணத்தில் இடம்பெற்ற சித்திரப்போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசில்களைப் பெற்றுவருகின்றார். சிறுகதை எழுதுவது, பாடல்கள் இயற்றுவது போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டுவரும் அவர் தகப்பனுருடைய வாரிசாகக் கிடைத்திருப்பது கலையுலகம் மகிழத்தக்கதே!

—தேவிபரமலிங்கம்

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தை திருத்தி அமைத்து நவீன மயபடுத்த வித்தியாலய அதிபர் செல்வி. இராசமணி. சின்னத்தம்பி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தை திருத்தி அமைக்க அதிபர் செல்வி. சின்னத்தம்பியின் வேண்டுகோளை ஏற்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் கிளிநொச்சி மாவட்ட நிதியில் இருந்து26,000ரூபாவைஒதுக்கி உள்ளனர். (க)

## முன்னாள் அமைச்சர் பீலிக்ஸுக்கு ....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் ஐயாயிரம் பவுண்களைப் பெற்றனர்என்றும், இத்தொகையை அவர்களது மருத்துவ செலவுகளுக்குப் பாவித்ததாகவும், அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றியே இத்தொகை அவர்களால் பெறப்பட்டுள்ளதென்றும் அந்த ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

திரு. பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்கா அவ்வாசிரியத் தலையங்கம் தமக்குப் பெரும் அவமானத்தைப் பெற்றுத்தந்துள்ளதெனவும், அதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்கு மாறானவையென்றும் குறிப்பிட்டு அப்பந்திரிகை நிறுவனத்திடம் தமக்கு 5 லட்சம் ரூபா நஷ்டஈடு வளங்கும்படி கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கை முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எச். டபிள்யு. செனநாயக்கா விசாரித்து வந்தார். பின்னர் அவர் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியுயர்வுபெற்றதையடுத்து மாவட்ட நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரிரியாஇவ்விசாரணைகளைத் தொடர்ந்தார்.

'டெயிலிநியூஸ்' பத்திரிகை சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களில், பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவரால் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகாவின் வெளிநாட்டுச் செலவுகள்பற்றி எழுதப்பட்ட கேள்வியொன்றுக்கு நீதியமைச்சர் திரு. ரொனிடிமெல் வழங்கிய விளக்கத்தின் அடிப்படையிலேயே அந்த ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் நிதி அமைச்சரின் அவ் விளக்கம், பாராளுமன்ற 'ஹன்சாட்'டிலும் இடம்பெற்றிருப்பதாகவும்தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக விசாரணை முடிவில் நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா, முறைப்பாட்டுக்காரரான திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவுக்கு அவர் கோரியிருந்த 5 லட்சம் ரூபாவில் நான்குலட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படி தீர்ப்பளித்தார்.

முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா கடந்த ஸ்ரீ. ல. சு. க. ஆட்சியில், நிதி, நீதி, பொதுநிர்வாகம், உள்ளூராட்சி ஆகிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக விருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## யாருடையது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஐ. ஜெயானந்தன் என்பவர் ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில் சிறிய பேர்சுடன் சிறு தொகைப் பணத்தினைக் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத் துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## அறிவியற் கருத்தரங்கு

(கரவெட்டி)

அச்சுவேலி லயன்ஸ்கழக ஆதரவில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் அண்மையில் அறிவியற் கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது.

திரு. கே. வி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கோழிவளர்ப்பு, உப உணவுப்பயிர்ச் செய்கை, திராட்சைச் செய்கை, விவசாயத்தில் வங்கியின்பங்கு,குடும்பநலம் ஆகிய கருத்துரைகள் வழங்கப்பட்டன.

மாதந்தோறும் இத்தகைய கருத்தரங்குகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00
★ 2-ம் பரிசு ரூபா 300-00

**முடிவு திகதி: 30-6-84**

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

இரசிகமணி குறுநாவல் போட்டி
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.

## ராணுவ டாக்டரின் கைகளை வெட்டினாராம்!

(புதுடில்லி)

அமிர்தசரஸ்புனித பொற் கோவிலில், ராணுவ வீரர் ஒருவருக்குச் சிகிச்சை யளித்துக் கொண்டிருந்த ராணுவ டாக்டர் ஒருவரின் கைகளிரண்டும் சீக்கியத் தீவிரவாதி ஒருவரினால் வெட்டப்பட்டதாக மேஜர் ஜெனரல் பிரார் தெரிவித்துள்ளார்.

ராணுவவீரர் கடும் காயமுற்றிருந்த போது அவருக்கு ராணுவ டாக்டர் காப்டன் ராம்பால் சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார். சமயலறைக்குள் இது நடந்தது. திடீரென அங்கு புகுந்த தீவிரவாத தற்கொலைப்படையினர் அறையை பூட்டினர். டாக்டரின் கைகளிரண்டையும் வெட்டினர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புக்கு எதிர்ப்புதெரிவித்து கிராமமக்கள் உண்ணாவிரதம்!

## நூற்றுக்கணக்கில் மக்கள் கலந்துகொண்டனர்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி செய்வதையும், வியாபாரம் செய்வதையும் தடுக்குமுகமாக கிராமிய விழிப்புமன்றத்தினர் கிராமம் தோறும் உண்ணாவிரதம் இருக்கமுடிவு செய்துள்ளனர்.

உரும்பராய் பகுதியில் கசிப்பு உற்பத்தியை ஒழிக்க வேண்டுமென்று கோரி கிராமிய விழிப்பு மன்றத்தினர் நேற்று முன்தினம் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

உரும்பராய் சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சுலோக அட்டைகளுடன் உண்ணாவிரதம் இருந்தனர்.

இவ்வுண்ணாவிரதத்தில் இணுவில், உரும்பராய், ஊரெழு, அச்செழு, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, கோப்பாய் ஆகிய இடங்களைச்சேர்ந்த ஆண்களும், பெண்களும் வாலிபர்களும் கலந்துகொண்டனர்.

'குடியைக் கெடுக்கும் கசிப்பை ஒழிப்போம் என்ற' பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## மருதங்கேணி கொலை வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
மருதங்கேணி கொலை வழக்கு நேற்று யாழ், மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு செப்டெம்பர் 24ம் தேதிக்கு ஒத்திப்போடப் பட்டுள்ளது.

இவ் வழக்கில் மருதங்கேணியில் உள்ள ஆதிரையன் என்ற இடத்தில் 76ம் ஆண்டு ஜூன் 25ம் தேதி கே. கருணரத்னவை கொலை செய்ததாகவும் மற்றும் நான்கு பேருக்கு காயம் விளைவித்ததாகவும் கே. தவராசா, க. பத்மநாதன் க. சிவஞானம், பி தங்கராசா வி. வச்சிரவேலு, செ வன்னியசிங்கம், எஸ். நித்தியானந்தன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், அரசதரப்பில் சட்டத்தரணி குரொசட் தம்பையாவும் ஆஜரானார்கள்.

## ஓர் மாணவியின் சோகக் கதை!

(யாழ்ப்பாணம்)
குடும்ப நிலைமையைக்கூறி பாடசாலையில் சகமாணவிகள் செய்த கேலியைத்தாங்க முடியாமல் 14 வயது மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த கமலேஸ்வரி இரத்தினசிங்கம் என்பவரே தற்கொலை செய்தவராவர்.

யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் நேற்று மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவருக்கு ஏழு சகோதரர்கள் உண்டு என்றும் எல்லோரும் தங்கள் விருப்பப்படி திருமணம் செய்துவிட்டார்களென்றும் சில வருடங்களுக்கு முன்னர் தந்தையும் தற்கொலை செய்துவிட்டாரென்றும், குடும்பத்தை பராமரித்து வந்த தமையனும் தன் விருப்பப்படி திருமணம் செய்துவிட்டாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

பாடசாலையில் குடும்பநிலையைக்கூறி சகமாணவிகள் கேலி செய்தார்களென்றும் தாயாரும் பாடசாலை செல்லுமாறு வலியுறுத்தியதால் நச்சுத்திராவகம் அருந்தினர் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது, (க)

## விவேகானந்தசபையின் ஆண்டுக் கூட்டம்

(கொழும்பு)
கொழும்பு விவேகானந்த சபையின் 81வது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறும். பின்வரும் பிரேரணைகள் இக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கின்றன.

''1983 ஜூலைக் கலவரத்தில் உயிரிழந்தோரின் ஆன்மா சாந்தியடையவும் இதனல் பாதிக்கப்பட்டோர் புது வாழ்வு பெறவும் இறைவனைப் பிரார்த்தித்தல்.

பாதிக்கப்பட்டு சேதமடைந்த பல ஆலயங்களை புனர்நிர்மாணஞ் செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்பு கொள்ளுதல், இந்நாட்டுச் சைவஆலயங்கள் மட்டுமன்றி ஏனைய மத நிறுவனங்களினதும் எதிர்காலப் பாதுகாப்பிற்கு வரையறைசெய்யும் வகையில் பிரஸ்தாப அமைச்சுக்களை கேட்டுக்கொள்ளல்.

''இந்துசமயத்தின் பெயரால் அண்மைக்காலமாக இந்நாட்டிற்கு முற்றிலும் அந்நியமானதும் செயலுருவம் இல்லாததுமான சில தாபனங்கள் அரச மற்றும் முக்கிய மாநாடுகளிலும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்தல், இந்நாட்டின் பழம்பெரும் சைவத்தாபனங்களாகிய யாழ். சைவபரிபாலன சபை, கொழும்பு விவேகானந்தசபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கொழும்பு இந்து வித்தியா விருத்திச்சங்கம் போன்றவற்றிற்கு வழங்கி அழைக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தைக் கோருதல்''.

## விதியின் விளையாட்டு

(யாழ்ப்பாணம்)
மண்வீட்டில் குடியிருந்துவிட்டு, வீடமைப்புத் திட்டத்தில் கல்வீடு பெற்று அங்கு குடியேறியவர், தமது பழைய மண்வீட்டை இடிக்க முற்பட்ட போது, சுவர் விழுந்து பலியானர்,

இருபாலையைச் சேர்ந்த சின்னதம்பி சிவசம்பு (54 வயது) என்பவரே பலியானவராவார்

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

கல்வீட்டில் குடியேறியதும் தமது மகன் ராஜேந்திரனுடன் சென்று மண்வீட்டை உடைக்க முற்பட்டபோது இச்சம்பவம் நடந்ததாக கூறப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரனை அதிகாரி விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## மரண அறிவித்தல்

### திரு. V. C. கதிரேசன்

திரு V. C. கதிரேசன் [ஓய்வுபெற்ற ஆசிரியர்] காலமானர். இவர் விக்ரோறியா ஜீவரத்தினம் அவர்களின் அன்புக்கணவரும் திருமதி ஜீவஜோதி நேசசீலன், ஜீவகுமார், சந்திரகுமார், சூரியகுமார், சுகுமார், தவகுமார், தேவகுமாரி, சிறிகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. V. S. டெனியல் அவர்களின் மருமகனும் ஆவார். ஈமக்கிரியைகள் 27-06-84 காலை 10-00 மணியளவில் ''மகேஸ்வரி வாசா'' அளவெட்டி தெற்கு, அளவெட்டியில் நடைபெறும். 513

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் மூத்ததம்பி

திருநெல்வேலி ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள கட்டிட பரிசோதகர் வல்லிபுரம் மூத்ததம்பி காலமானர். அன்னர் சுகிர்தலட்சுமியின் அன்புக்கணவரும், Dr. சிறீகணேசன் (இங்கிலாந்து), சந்திரோதயம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr. புனிதவதி (இங்கிலாந்து), Dr. பாலேந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனரும், வத்சலா, சியாமளா, முரளி ஆகியோரின் பேரனும், நடராசா, நாகேந்திரன், ரத்தினம், பாக்கியம், செல்வம், பவளம், ஆகியோரின் அன்புச்சகோதரரும், S. பொன்னம்பலம், சுப்பிரமணியம், காலம்சென்ற நடேசன், T. பொன்னம்பலம், மகாலட்சுமி, காலம்சென்ற நவநீதம், செல்வராசா, முத்துலிங்கம், இந்திராணி, ராஜபூவதி, முத்துராணி ஆகியோரின் மைத்துனருமாவார். உற்றூர் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர், மரணச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

விலாசம்:
கோணமலை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

511

### நட்டத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட பிரதிநிதிகளே இந்த ஆலோசனை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவரும் கூட்டுத்தானங்களுக்கு திறைசேரியிலிருந்து தொடர்ந்து நிதி உதவி வருவதால் வரவுசெலவுத் திட்டத்தில் பாதிப்பு ஏற்படும் என்று இந்த பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனராம்,

### காயமடைந்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பெற்றுவந்தார். நேற்றுமுன் தினம் இவர் மரணமானர்,

யாழ் நீதவான் திரு, எஸ். நாகராசா மரணவிசாரணையை நடத்தினர். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணையை ஒத்திவைத்தார். [க]

### யாழ். பல்கலைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இருநிமிட மௌனஞ்சலி செலுத்தினர்.

#### பகிஷ்கரிப்புநீடிக்கிறது

கடந்த 18-ம் திகதி தொடக்கம் யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து விரிவுரைகளுக்குச் செல்லாது தொடர்ந்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

நேற்றுமுன்தினம் தேசியபந்தோபஸ்துஅமைச்சர்திரு.லலித் அத்துலத்முதலி, யாழ்ப்பாணத்துக்கு திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது, யாழ். பல்கலைக்கழகமாணவர் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகளுடன் பேச்சுநடத்தியிருந்தார்.

இதுசம்பந்தமாக மாணவர் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட மாணவர் பகிஷ்கரிப்புக்கோரிக்கைகளுக்கு அரசதரப்பில் எந்தவித உறுதிப்பாடும் அளிக்கப்படாததால் பகிஷ்கரிப்புத் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்தார்.

மாணவர்கள் பிரதிநிதிகள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இன்றும் பேச்சுவார்த்தை நடத்துவர். (மா)

## 'ஆசிய நாட்டவர்க்கு அதிக இடமா?'

## பேராசிரியர் பேச்சினல் மாணவர்கள் ஆத்திரம்

மெல்போர், ஜூன் 25
ஆத்திரமடைந்த பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் பேராசிரியர் ஒருவரின் விரிவுரை வகுப்பொன்றை குழப்பியடிக்க முற்பட்டனர். இச் சம்பவம் ஆஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியானஜொவ்ரி யிளேய்னி என்பவரே அப் பேராசிரியராவார், இவர் தமது வகுப்பொன்றில் ''ஆஸ்திரேலியா அளவுக்கதிகமாக ஆசியநாட்டவர்களை வர அனுமதிக்கிறது'' என்று தெரிவித்திருந்தாராம்.

இதனைத் தொடர்ந்தேசுமார் 150 மாணவர்கள் இப்பேராசிரியர் விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது அதனைக் குழப்பியடித்து கலாட்டா செய்யமுற்பட்டனர்.

இவ்அத்துமீறல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் இருபது பேரைப் பொலிசார் கைது செய்தனர். (கி)

### திருநெல்வேலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டிப்போ இன்ஸ்பெக்டர் எஸ். கனகரத்தினம் தலையில் சூடுபட்டு ஸ்தலத்திலேயே பலியானர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பஸ் சாரதி வி. தளையசிங்கம் பலத்த காயத்திற்குள்ளானர்.

உதவிப்பொலிஸ் இன்ஸ்டபக்டர் சந்திரசிறி, கான்ஸ்டபிள்கள் அபயரத்ன, சிறிவர்த்தன இம்மனுவேல் ஆகியோர் காயமடைந்தனர்.

பொலிஸார் திருப்பிச்சுட்டதைத் தொடர்ந்து, இளைஞர்கள் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது இச்சம்பவத்தின் போது கொள்ளை எதுவும் நடைபெறவில்லை .

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது.

#### மரண விசாரணை

டிப்போ இன்ஸ்பெக்டர் எஸ். கனகரத்தினத்தின் மரணம்குறித்து யாழ். நீதவான் எஸ். நாகராசா நேற்றுமரண விசாரணையை நடத்தினர்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு மரணவிசாரணையை இன்று காலைவரை ஒத்திவைத்தார். (க)

## ஆலய உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வரும் சனிக்கிழமை மாலை கைலாசவாகனத் திருவிழாவும் அடுத்த மூன்றும் திகதி சப்பறத்திருவிழாவும் அடுத்த நாள் தேர்த்திருவிழாவும் 5ம் திகதி தீர்த்தோற்சவமும் அடுத்தநாள் பூங்காவனமும் நடைபெறும்.

### மாத்தனைக் கந்தசுவாமி கோவில்

கொக்குவில் கிழக்கு மாத்தனைக் கந்தசாமி கோவில் உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அடுத்த மாதம் மூன்றும் திகதி சப்பறத்திருவிழாவும், நான்காம் திகதி தேர்த்திருவிழாவும் ஐந்தாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### காவலூர் சிவன்

[யாழ்ப்பாணம்]
ஊர்காவற்றுறை, கரம்பன் சிவன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று நண்பகல் கொடியேறறத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 5ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. உற்சவத்துக்துக்கான ஒழுங்குகளை ஆலய பரிபாலர் க. சந்திரகாந்த ஐயர் செய்துள்ளார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org